

இராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி தெற்கு ஒன்றிய செயலாளர் ஆர்.பி.இரவீந்திரன் ஏற்பாட்டில் ரெட்டிவலம் பகுதியில் மாற்றுக் கட்சியினர் தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி.முன்னிலையில் பல்வேறு கட்சியைச் சேர்ந்த (அ.இ.அ.தி.மு.க. – பி.ஜே.பி.– பா.ம.க.வில்) 250 பேர் திமுகவில் தங்களை இணைத்துக் கொண்டனர். இதில் மாவட்ட அவைத்தலைவர் ஏ. கே.சுந்தரமூர்த்தி மாவட்ட துணை செயலாளர்கள் மு.சிவானந்தம், துரைமஸ்தான், சோளிங்கர் தொகுதி தேர்தல் பார்வையாளர் பாஸ்கரன், நெமிலி ஒன்றியகுழ தலைவர் பெ.வடிவேலு, மத்திய ஒன்றிய செயலாளர் SGC.பெருமாள், வடக்கு ஒன்றிய செயலாளர் மணிவண்ணன் மாவட்ட விவசாய தொண்டர் அணி அமைப்பாளர் ராமலிங்கம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வி.எஸ்.முரளி மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்

### திருப்பத்தூர் அருகே இரண்டு அரசுப் பேருந்துகள் மோதிய

# விபத்தில் பலியானவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வரின் அறிவுறுத்தல்படி அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன் – சா.சி.சிவசங்கர் வழங்கினர்!

சிவகங்கை, டிச.2–

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் இருந்து பழனிக்கு அரசு பேருந்து நேற்றுமுன் தினம் சென்றுகொண்டிருந்தது. அதேபோல் பழனியிலிருந்து காரைக்குடிக்கு அரசு பேருந்து சென்றுகொண்டிருந்தது. இரண்டு பேருந்தும் திருப்பத்தூர் வைரவன்பட்டி சமத் துவபூரம் அருகே நேருக்கு நேர் மோதிக் கொண்டது. இதில் 11 பேர் சம்பவ இடத்தி லேயே இறந்து போனார்கள். 40 பேர் காயமடைந்தார்கள்.

இது பற்றிய தகவல் கிடைத்ததும் மாவட்ட ஆட்சியர் திருமதி கா.பொற்கொடி மற்றும் வருவாய்த்துறை காவல் துறை அதி காரிகள் உடனடியாக விபத்து நடைபெற்ற இடத்திற்கு விரைந்து வந்தார்கள். காயம் அடைந்தவர்களை சிவகங்கை காரைக்குடி திருப்பத்தூர் ஆகிய அரசு மருத்துவம னைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத் தார்கள்.

விபத்தில் பலியானவர்களின் உடல் களை சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்தார்கள் .இது பற்றிய தகவல் கிடைத்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் கூட்டு றவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப் பன் போக்குவரத்துதுறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் ஆகியோரை உடனடியாக விபத்து நடைபெற்ற இடத்திற்கு விரைந்து சென்று உதவிகளை செய்யுமாறு அறிவுறுத்தினார். முதல்வர் அறி வுறுத்தலின் படி அமைச் சர்கள் இருவரும் கே.ஆர்.பெரியகருப்பன், அரியலூரில் இருந்த போக்குவரத்துதுறை அமைச்சர் சிவசங்கர் ஆகியோர் நேற்று நள் ளிரவு சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வந்தார்கள். காயம் அடைந்து சிகிச்சை பெற்றுவருபவர்களை சந்தித்து மருத்துவ சிகிச்சை குறித்து கேட்ட றிந்து ஆறுதல் கூறினார்கள். அவர்களுக்கு அளிக்கப்படும் மருத்துவ சிகிச்சைகள் குறித்து மருத்துவமனை முதல்வர் சீனிவா சனிடம் கேட்டார்கள். அவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்குமாறு ஆலோசனை கூறி னார்கள். தொடர்ந்துவிபத்தில் இறந்து போன மூன்று பேரில் உடல்கள் அடையாளம் காணப்பட்டு பிரதப் பரிசோதனை முடிவ டைந்து மருத்துவமனையில் வைக்கப்பட்டி ருந்தது. அவர்களின் உடலுக்கு மலர் வளை யம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள். பலியானவர்களின் உறவினர்களிடம் முதல் வரால் அறிவிக்கப்பட்ட உதவித்தொகை ரூபாய் 3லட்சத்தினை வழங்கி ஆறுதல் கூறினார்கள். மூன்று பேரின் உடல்கள் உற வினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.



அமைச்சர்கள் கே.ஆர். பெரியகருப்பன் மற்றும் எஸ்.எஸ். சிவசங்கர் ஆகியோர், நேற்று முன்தினம் (30.11.2025) சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், காரைக்குடி திருப்பத்தூர் சாலை, கும்மங்குடி கிராமத்தில் அரசுப் பேருந்துகள் நேருக்குநேர் மோதிக்கொண்ட விபத்தில் காயமடைந்து, காரைக்குடி அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை, நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்து நலம் விசாரித்தனர்.

அதனைத் தொடர்ந்து அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் செய்தியாளர்களி டம் கூறியதாவது இந்த சம்பவம் மிகவும் துயரமானது. கோரமானது இந்த விபத்தில் 11 பேர் உயிரிழந்துள்ளார்கள். மூன்று பேரின் உடல்கள் அடையாளம் கண்டுபிடித்து பிரேத பரிசோதனை முடிந்து உறவினர்களிடம் ஒப் படைக்கப்பட்டுள்ளது. காயமடைந்தவர்க ளுக்கு உரிய சிகிச்சை சிவகங்கை, திருப்பத் தூர், காரைக்குடி, ஆகிய ஊர்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் தரப்பட்டு வருகி றது. அவர்களுக்கு தேவையான அனைத்து உயர் சிகிச்சை களை அளிக்குமாறு மருத்து வத்துறை அதிகாரிகளிடம் கூறப்பட்டுள்ளது. இந்த விபத்து குறித்து விசாரணை நடை பெற்று வருகிறது.

போக்குவரத்து அமைச்சர் இது குறித்து விசாரணை முடிவடைந்ததும் உரிய நட வடிக்கை எடுக்க உத்தரவிடுவார். விபத்து ஏற்பட்ட இரண்டு பேருந்துகள் புதிய பேருந் துகள் ஆகும். இந்த விபத்து பழைய பேருந் தால் ஏற்பட்டதாக எதிர்க்கட்சிகள் வழக்கம் போல்இதில் அரசியல் செய்கிறார்கள். அவர்களுக்கு இதை வைத்து அரசியல் செய் வதில்என்னலாபம் என்று தெரியவில்லை. முதல்வர் அவர்கள் அறிவுரையின் படி உரிய நிவாரண உதவி மற்றும் நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த விபத்து குறித்து தகவல் கிடைத்த தும் மாவட்ட ஆட்சியர் திருமதி கா.பொற் கொடி தலைமையில் வருவாய்த்துறை அதி காரிகள், காவல்துறை அதிகாரிகள் மற்றும் பொது மக்கள் மற்றும் அலுவலர்கள் விரைந்து வந்த உரிய நேரத்தில் நடவடிக்கை எடுத்ததால் பெரிய அளவிலான உயிர் சேதங்கள் தவிர்க்கப்பட்டது. இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கூறினார்.

### காரைக்குடி – திருப்பத்தூர் சாலை, கும்மங்குடி கிராமத்தில்

# அரசுப் பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்து - 11 பேர் பலி!

## உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் நிவாரண உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, டிச.2-

**சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், காரைக்குடி - திருப்பத்தூர் சாலை, கும்மங்குடி கிராமத்தில் அரசுப் பேருந்து கள் நேருக்குநேர் மோதிக்கொண்ட விபத் தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தின ருக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர் கள் ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித் துள்ளார்.**

இதுதொடர்பாக முதல்வர் அவர்களின் அறிக்கை வருமாறு :-

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், காரைக்குடி - திருப்பத்தூர் சாலை, கும்மங்குடி கிராமத்தில் அன்று 30.11.2025 பிற்பகல் அறந்தாங்கியிலி ருந்து திண்டுக்கல் நோக்கிச் சென்ற அர சுப் பேருந்தும், திருப்பூரிலிருந்து காரைக் குடி நோக்கிச் சென்றுகொண்டிருந்த அரசுப் பேருந்தும் எதிர்பாராதவிதமாக நேரு க்குநேர் மோதிக்கொண்ட விபத் தில், பேருந்துகளில் பயணம் செய்த ஒன் பது பெண்கள், இரண்டு ஆண்கள் என மொத்தம் பதினொரு நபர்கள் உயிரிழந் தனர், மேலும், 54 நபர்கள் காயம் அடைந்துள்ளனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு கடும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந் தேன்.

இவ்விபத்தில், காயமடைந்தவர்களுக் குத் தீவிர சிகிச்சை அளிப்பதற்காக அருகி லுள்ள அரசு மருத்துவமனைகளிலி ருந்து திருப்பத்தூர், காரைக்குடி அரசு மருத்துவமனை மற்றும் சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவம னைக்கு அரசு மருத்துவர்கள் கூடுதலாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். மேலும், தீவிர சிகிச்சை வழங்கப்பட வேண்டிய வர்கள் மதுரை அரசு மருத்துவக் கல் லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைக் கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்கள் அனைவருக்கும் சிறப்பு சிகிச்சை வழங் கிட அறிவுறுத்தியுள்ளேன்.

மேலும் மாவட்ட ஆட்சியரையும் மாவட்டப் பொறுப்பு அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பனையும்தொடர்புகொண்டு, சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உரிய உயர்தர சிகிச்சை கிடைப்பதை உறுதி செய்திடுமாறு அறிவுறுத்தியுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவி னர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை யும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வ தோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத் தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபா யும், பலத்த காயமடைந்து மருத்துவம னைகளில் சிகிச்சை பெற்று வருபவர்க ளுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவம னைகளில் சிகிச்சை பெற்று வருபவர்க ளுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதல மைச்சரின் பொது நிவாரண நிதியிலி ருந்து வழங்கிடவும் உத்தரவிட் டுள்ளேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப் பிட்டுள்ளார்.

### திருக்கழுக்குன்றத்தில் பேருந்து – வேன் மோதல்:

# உயிரிழந்த 2 பேர் குடும்பத்திற்கு ஆறுதல் - தலா ரூ.3 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, டிச. 2 -

**செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக் குன்றம் வட்டம், குன்னத்தூர் கிராமத்தில் அரசுப் பேருந்தும் தனியார் வேனும் நேருக்குநேர் மோதிக்கொண்ட விபத்தில் உயிரிழந்த இருவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை முதலமைச் சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித் துள்ளார்.**

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக் குன்றம் வட்டம், குன்னத்தூர் கிராமத்தில் நேற்று (01.12.2025) காலை சுமார் 6.00 மணியளவில் சென்னையிலி ருந்து புதுச்சேரி வழியாக சென்றுகொண் டிருந்த அரசுப் பேருந்து ஒன்றும், கீழார் கொள்ளை கிராமத்திலிருந்து ஆலந்தூரி லுள்ள தனியார் நிறுவனத்திற்கு ஊழியர் களை ஏற்றிச் சென்ற தனியார் வேன் ஒன்றும் நேருக்குநேர் மோதிக்கொண்ட விபத்தில் வேனில் பயணம் செய்த திரு மதி. உமா (வயது 40) க/பெ.மூர்த்தி மற் றும் திருமதி.பானு (வயது 24) க/பெ.சர வணன் ஆகிய இரண்டு பெண்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு கடும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந் தேன்.

மேலும் இந்த விபத்தில் காயமடைந்து செங்கல்பட்டு அரசு பொது மருத்துவ மனை, பூஞ்சேரி அரசு மருத்துவமனை மற்றும் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு சிறப் பான சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட் டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவி னர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை யும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வ தோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தி னருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனைக ளில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கி டவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆலந்தூர் ம. ஆபிரகாம்

### டிசம்பர் 2 (1987)



ஆலந்தூர் நகரக் கழகச் செயலாளராகவும் – சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

இந்தித் திணிப்பை எதிர்த்து கழகம் நடத்திய சட்டப்பிரிவு நகல் எரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக, 1986ஆம் ஆண்டு ஆளுங்கட்சியால் சட்டமன்றத்தில் பதவிப் பறிப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு, பதவி பறிக்கப்பட்ட பேராசிரியர் உள்ளிட்ட பதின்மருள் ஆபிரகாமும் ஒருவர்.

கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

நெருக்கடி நிலை காலத்தில் ‘மிசா’ கைதியாக ஓராண்டு சிறையில் இருந்தவர்.

“கழகத்தின் இரும்புத் தூண், எதிர்ப்புக்கும், இன்னலுக்கும், அடக்குமுறைக்கும் என்றுமே வளைந்து கொடுக்காத உறுதி படைத்த கொள்கைக் குன்றம்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# 25-ஆம் ஆண்டு
# நினைவு அஞ்சலி

## வறுமையில் நேர்மை!
## வளமையில் எளிமை!!

டிசம்பர் 02 2025



# N.V.வீரய்யன் INA அவர்கள்

நகர தி.மு.க மு.அவைத் தலைவர்
நகரமன்ற மு.உறுப்பினர்
வர்த்தகர் சங்க மு.தலைவர்

...நீங்கா நினைவுகளுடன்...

**வீரா.கணேசன்** B.Com.,
நகர கழகச் செயலாளர்,
மன்னார்குடி.

**வீரா.கதிரவன்** M.A., M.L.,
மூத்த வழக்குரைஞர்,
அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞர்
உயர்நீதிமன்றம் - மதுரை.